பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 2 (19—10—71) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 3 (20—10—71) புதன் [இதழ்: 104

பாகிஸ்தானுடன் போர் மூளுமா?

அச்சுறுத்தலை சமாளிக்க இந்தியா உறுதி

எதிரிகளுக்குப் பாதுகாப்பமைச்சர் கடும் எச்சரிக்கை

புதுடில்லி, அக். 18—

பாகிஸ்தானின் எல்லாவிதமான அச்சுறுத்தலையும் உறுதியுடன் சமாளிப்பது என்ற முடிவுடனேயே இந்தியா செயல்பட்டு வருகிறது.

இந்தியாவின் உறுதியை அறிவித்த பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெ ஜீவன்ராம், 'வங்க தேசப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காணும் வரையில் இந்தியப் படைகள் எச்சரிக்கையுடனேயே இருந்துவரும்' என்று கூறினர்.

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய திரு. ஜெகஜீவன் ராம், 'இந்தியாவின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு' என்றார்.

பாகிஸ்தான் ஒரு போருக்குத் துணிந்தால், நமது படையினரால் கைப்பற்றப்படும் பாகிஸ்தான் பகுதிகளிலிருந்து—என்ன விளைவுகள் நேர்ந்தாலும்—நாம் வெளியேறப் போவதில்லை என்பதையும் பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்" என்றும் அறிவித்தார்.

"கிழக்கு -- மேற்கு எல்லைகளில் பாகிஸ்தான் கடுமையான ஆத்திரமூட்டல்களில் ஈடுபட்டிருப்பினும் ஒரு பெரும் போர் மூளுவதைத் தவிர்க்கக்கூடிய வாய்ப்பு இன்னமும் இருப்பதாகவே இந்தியா நம்புகிறது" என்றார்.

வி. வி. கிரி நிலைமை விளக்கம்

யூகோஸ்லாவியக் குடியரசுத் தலைவர் டிட்டோவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விருந்து ஒன்றில் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி பேசுகையில், இந்தியா காட்டிவரும் பொறுமையை எடுத்துக் காட்டினர்; வங்கதேச அகதிகள் கௌரவமாகவும், பயமின்றியும் நாடுதிரும்பும் நிலையை ஏற்படுத்துவதில் இந்தியா உறுதியாக இருப்பதாகக் கூறினர்.

மார்ஷல் டிட்டோ ஒப்புதல்

இந்தியாவின் அச்சத்தை, யூகோ தலைவரும் முழுவதுமாக ஒப்புக்கொண்டார்; 'கிழக்கு வங்கத்தில் நிலவும் சகிக்க முடியாத நிலைமை, இந்தத் துணைக் கண்டத்தின் அமைதிச் சூழ்நிலையைக் கெடுத்துவிடுவதுடன் நில்லாது அதற்கு வெளியிலும் எதிரொலிக்கச் செய்யக்கூடும்' என்று டிட்டோ கூறினர்.

நட்பு நாடுகளிடம் இந்தியா விளக்கம்

இந்திய அரசு எல்லா நட்பு நாடுகளிடமும், ஏற்பட்டிருக்கும்புதிய சூழ்நிலைகள் குறித்து எடுத்துக் கூறியிருக்கிறது.

முஜிபுர் ரகிமான் உயிருக்குஉத்தரவாதம்

அமெரிக்காவும் -- இரஷ்யாவும், முஜிபுர் ரகிமான்மீது நடைபெறும் விசாரணையின் முடிவு எப்படியிருந்தாலும், ரகிமானின் உயிருக்கு உத்தரவாதம் தர யாகியாகான்அரசை வற்புறுத்த முடியும் என்று இந்தியாவிடம் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

மேலும், இராணுவ நடவடிக்கைகளில் இறங்காதவாறு பாகிஸ்தானுக்கு இந்த இரு நாடுகளும் அறிவுறுத்தி வருவதாகவும் இந்தியாவிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தியாவின்உறுதி

ஆயினும் வங்க தேசம் பிரச்சினையை ஓர் அனைத்து நாட்டுப் பிரச்சினையாக்கும் நோக்குடன் பாகிஸ்தான் மேலும் சிக்கலைக் கடுமையாக்கத்தான் முயற்சிக்கும் என்றே இந்தியா கருதுகிறது.

இதற்குப் பதில் தரும் வகையில், வங்க தேசம் விடுதலையடைய வேண்டும் என்ற குறிக்கோளைப் பலமாக ஆதரிப்பதுடன் பாகிஸ்தானின் போர் மிரட்டலைத் தகுந்த முறையில் சந்திப்பது என்பதிலும் இந்தியா உறுதியுடன் இருந்துவருகிறது.

எல்லை நெடுகிலும் தக்க பாதுகாப்பு

ஜோத்பூர், அக். 18—

பாகிஸ்தானின் போர் மிரட்டலைச் சமாளிக்கும் நோக்குடன், எல்லை நெடுகிலும் இந்தியா தகுந்த பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இராஜஸ்தானை ஒட்டிய எல்லையில் இதுவரை நிற்கவைக்கப்பட்டிருந்த எல்லைப் பாதுகாப்புப் படையினருக்குப் பதிலாக இப்போது இராணுவம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மத்திய உள்துறைத் துணையமைச்சர் மிர்தா இப்பகுதிச்கு வருகை தந்து சிவில் -- இராணுவ அதிகாரிகளுடன் விவாதம் நடத்தி வருகிறார்.

பாகிஸ்தானை ஒட்டிய ஜம்மு எல்லையிலும், தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியின் நிலைமையை ஆராய மாநிலத் தலைமைச் செயலாளரும், போலீசு ஐ. ஜி.-யும் இப்பகுதிக்கு விரைந்திருக்கிறார்.

பஞ்சாபிலும், சிவில் பாதுகாப்புப் பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஐ. நா. பார்வையாளர்கட்குப் பாகிஸ்தான் கட்டுப்பாடு

இந்தியா - பாகிஸ்தான் எல்லையைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஐ நா. பார்வையாளர்களின் நடமாட்டத்துக்குப் பாகிஸ்தான் ஆட்சிக் கட்டுப்பாடு விதித்திருக்கிறதாகக் கூறப்படுகிறது.

எல்லையில் பெரும் அளவு இராணுவத்தைக் குவித்துப் பாகிஸ்தான் செயல்பட்டு வருவதை ஐ. நா. பார்வையாளர்களுக்கு மறைக்கவே இக்கட்டுப்பாடு விதிககப்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

வங்க அகதிகள் நிவாரண நிதி

கல்கத்தா, அக். 19—

"கிழக்கு வங்க அகதிகள் நிவாரண உதவிக்காக இந்தியா 55.80 கோடி டாலர் (ரூ. 418 50 கோடி) கேட்டிருக்கிறது; இதற்கு உதவுமாறு பல்வேறு நாடுகளின் அரசுகளுக்கு ஐ. நா. அகதிகள் நலக் குழு வேண்டுகோள் விடுக்கும்" என்று இந்தக் குழுவின் வெளி விவகாரப் பிரிவின் தலைமை அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஒதுக்கிய வீடுகளை வேறெருவருக்கு வாடகைக்கு விடுவதா?

சென்னை, அக். 19—

"குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டித் தந்தாலும், அந்த நல்ல -- புதிய குடியிருப்புகளில் குடியேறினல் எண்ணற்றவர்கள், தங்களுக்கென வாரியத்தினரால் ஒதுக்கப்பட்ட வீடுகளை வேறெருவருக்கு வாடகைக்கும் -- குத்தகைக்கும் கொடுத்துவிடுகின்றனர் -- என்ற தகவல்கள் எங்கள் கவனத்திற்கு வந்திருக்கின்றன.

"இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் -- எவ்வளவு பெரிய சிபாரிசுகளுடன் எங்களை வந்து சந்தித்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயங்கமாட்டோம்! வழக்குப் போடவும் வாரியம் தயங்காது!"

--இராம. அரங்கண்ணல்

(குடிசை மாற்று வாரியத் தலைவர்)

'தமிழகத்தின் வீர உணர்வை மீண்டும் வெளிப்படுத்தும் நேரம் வந்திருக்கிறது'

[★]

'மானப் போராட்டத்தில் வெற்றி கொள்ளச் சூளுரைத்துக் கொள்வோம்'

'சிறப்புப் பட்டங்களைவிட என்னை 'சிப்பாய்' என்று அழைப்பதையே பெருமையாக மதிக்கிறேன்'

சென்னை, அக். 19—

"இங்கே பலர் என்னை, 'தமிழவேள் -- முதல்வர் -- கலைஞர் -- கவிஞர்' என்றெல்லாம் பாராட்டினர்கள்; இந்தப் பாராட்டு விழா நடக்கின்ற மண்டபததிலே மகிழ்ச்சியோடு இருக்கிறோம்; ஆனல், இந்தியாவிற்கு எதிரிகளால் நேரவிருக்கும் அபாயத்தைத் தடுத்திட நம்மை நாம் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் எனும் நிலை நாட்டில் இருக்கிறது.

"ஆகவே என்னை, 'முதல்வர்' என்றழைப்பதைவிட -- 'டாக்டர்' என்றழைப்பதைவிட -- 'தமிழவேள்' என்று அழைப்பதைவிட, 'இந்தியாவை எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் சிப்பாய்களில ஒருவன்' என்று அழைப்பதையே விரும்புவேன்.

"இந்திய எல்லையில் பகைவர்களால் நேரவிருக்கும் பேராபத்து எத்தகையதாக உருவெடுக்கவிருக்கிறது என்பதை நீங்கள் இதிலிருந்து புரிந்துகொள்வீர்கள்; ஆகவே, அந்த ஆபத்தை நீககிட -- தடுத்திட -- தகர்த்திட -- தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழ்மகனும் சூளுரை எடுத்துக்கொள்ளும் காலம் வெகு விரைவில் வரவிருக்கிறது.

"டில்லியிலே நான், அங்குள்ள அமைச்சர்களைச் சந்தித்தபோதும் -- அதிகாரிகளைச் சந்தித்தபோதும் -- நிலைமைகளைச் சந்தித்தபோதும் -- தமிழ்ச் சங்கத்தில் பேசியபோதும்--நிருபர்களைச் சந்தித்தபோதும், 'இந்திய மக்கள் -- குறிப்பாகத் தமிழ் மக்கள், விரைவில் பல தியாகங்கள் செய்யவேண்டி வரும்' என்பதை உறுதியாக எடுத்துக் கூறியிருக்கிறேன்.

'இந்த எண்ணத்தில் நான் இருக்கின்றபோது' எனக்கு அளிக்கப்படும் பட்டங்களும் -- பாராட்டுக்களும் -- விருதுகளும் மிகுந்த மனமகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

"'இந்தியாவிற்கு எந்த ஆபத்து வருமோ' என்ற நிலை இருக்கிறது; 'ஆபத்து வந்தாலும், இறுதியாக இந்தியா தான் வெல்லும்' என்று உறுதியோடு கூறிக்கொள்வேன்.

"இந்திய நாட்டிற்காகச் செய்யப்படும் எந்தத் தியாகத்திலும், அது நாட்டு எல்லைக்கான போராட்டமானாலும் -- விடுதலைப் போராட்டமானாலும், குறிப்பாகத் தமிழ் மண், தனது மான உணர்வை -- வீரப்பண்பை உலகம் வியக்க மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது! மீண்டும் அத்தகைய வாய்ப்பு வருமாயின், அந்தத் தியாக உணர்வை -- வீர உணர்வை -- மான உணர்வை மெய்ப்பித்துக் காட்டத் தமிழகம் தயங்காது! இந்தச் சூளுரை, அனைவரின் உள்ளங்களிலும் நிறைந்திருக்க வேண்டும்!"

---முதலமைச்சர் மு. கருணாநிதி

(தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவையின் சார்பில் அளிக்கப்பட்ட 'தமிழவேள்' பட்டமளிப்பு விழாவில்)

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.பி.
திருவள்ளுவராண்டு 2002 ஐப்பசி 2 (19—10—71) செவ்வாய்

இன்னமும் மவுண்ட் ரோடா?

சென்னையில் மவுண்ட் ரோடு என்பது 'அண்ணா சாலை'யாக மாறிப் பல மாதங்கள் ஆகிவிட்டன; ஆனால், இந்தப் பெயர் சிலருக்கு வேம்பங்காயாக இருந்துவருகிறது. இன்னமும் 'மவுண்ட் ரோடு' என்றே எழுதியும் பேசியும் வருகின்றனர்.

இந்தப் பெயர் மாற்றம் பொதுமக்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக, சாலையின் முக்கிய இடங்களிலெல்லாம் பெரிய பெரிய பெயர்ப் பலகைகளில், 'அண்ணா சாலை' என்று எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

"சென்னை நகரின் முக்கிய பெரிய சாலையாகத் திகழும் மவுண்ட் ரோடு என்னும் மலைச் சாலைக்கு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சூட்டவேண்டும்" என்ற கருத்தை, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்டபோது, தமிழ் மக்கள் அனைவருமே அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்; தமிழ்ப் பகைவர்களும் -- அவர்களுக்குத் துணை போகும் துரோகிகளும் மட்டுமே எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

இந்த எதிர்ப்பாளர்களுக்கெல்லாம், 'மவுண்ட் ரோடு மகாவிஷ்ணு' என்று பெயரெடுத்த 'இந்து'ப் பத்திரிகை தலைமை தாங்கிற்று; 'இந்தியன் எக்ஸ்பிரசு'ம் அதற்குத் துணையாக நின்றது; 'வாசகர் கடிதம்' என்ற பெயரால் பல கடிதங்களை உற்பத்தி செய்து வெளியிட்டு மகிழ்ந்தன!

தி.மு. கழகம் எதைச் செய்தாலும் எதிர்க்கின்ற கூட்டம்தான் இதையும் எதிர்த்தது; எனவே, அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் சென்னை மாநகராட்சி மன்றம் முறைப்படித் தீர்மானம் நிறைவேற்றி -- அரசுக்கு அதை அனுப்பிவைத்தது; அரசும் அதற்கு இணக்கம் தெரிவித்தது; அதன் பிறகே, 'அண்ணா சாலை' என்ற பெயர் சூட்டப்பட்டது.

சனநாயகத்தை உள்ளபடியே மதிப்பவர்களானால், சனநாயக ரீதியில் முறைப்படி நடைபெற்றுள்ள இந்தப் பெயர் மாற்றத்தை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்; ஆனால், அவர்களுக்கு ஏது சனநாயகமும் -- சமதர்மமும்? எல்லாம், சொந்தப் 'பணநாய'கமும் -- 'இனநாய'கமும்தானே அவர்களின் குறிக்கோள்!

பெரிய பத்திரிகைகள் எனப்படும் ஆங்கில -- தமிழ் நாளிதழ்களின் அலுவலகங்களெல்லாம், அண்ணா சாலையில்தான் உள்ளன; அந்தப் பத்திரிகைகள் அனைத்தும் கட்டுப்பாடாக, 'மவுண்ட் ரோடு' என்றே குறிப்பிடுகின்றன; 'அண்ணா சாலை' என்று தவறியும் போடுவதில்லை.

அண்ணா சாலையில் உள்ள ஒரு கட்டடத்தில் ஒரு நிகழ்ச்சி நடப்பதாக யாரேனும் ஒரு செய்தி அனுப்பினால்கூட, அதை வெளியிடும்போது 'அண்ணா சாலை' என்பதை அடித்துவிட்டு, 'மவுண்ட் ரோடு' என்றே குறிப்பிட்டு அச்சிடுகின்றனர்.

இதேபோல், அண்ணாமயில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட 'கலைவாணர் அரங்க'த்தைக் குறிப்பிடுவதற்குக்கூடச் சில ஏடுகள், பழைய பெயரான 'பாலர் அரங்கம்' என்றே வெளியிடுகின்றன!

சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள 'பேங்க்வெட்டிங் ஹால்', திடீரென 'இராஜாஜி மண்டபம்' என்று ஒரே நாளில் பெயர் மாறியது எப்படி?--இந்தப் பத்திரிகைக்காரர்களின் கட்டுப்பாடான ஏற்பாட்டின் விளைவுதான்!

அதேபோல், பூண்டி நீர்த்தேக்கம், 'சத்தியமூர்த்தி சாகர்' ஆனது எப்படி? -- காங்கிரசுக்காரர்களின் கையில் மாநகராட்சி இருந்ததன் பயன்தான்!

சைனா பஜார், 'நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை' ஆனது எப்படி? -- அன்றைய ஆட்சி காங்கிரசாரிடத்தில் இருந்த காரணத்தால்தான்!

காங்கிரசுக்காரர்களும், பத்திரிகைக்காரர்களும் நினைத்தால் எதையும் செய்யலாம் -- செய்ய முடியும்; மற்றவர்கள் எதைச் செய்தாலும், 'அது கூடாது -- ஆகாது' என்கின்ற மனப்பான்மை இனி செல்லாது.

இராஜாஜிக்கும் -- நேத்தாஜிக்கும் -- சத்தியமூர்த்தி ஐயருக்கும் எந்த அளவு மதிப்புத் தர அவர்கள் விரும்பினார்களோ அதைவிட மேலானதாகும் -- பேரறிஞர் அண்ணா அவர்கள்பால் தமிழ் மக்கள் கொண்டுள்ள மதிப்பு!

இராஜாஜி பெயரையும் -- நேத்தாஜி பெயரையும் -- சத்தியமூர்த்தி ஐயர் பெயரையும் யார் சூட்டினார்கள் என்பதைக்கூடப் பாராமல் தமிழ் மக்கள் ஒருமுகமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்; அந்தப் பெருந்தன்மை, இன்றைய 'அண்ணா சாலை எதிர்ப்பாளர்'களிடம் இல்லாதது ஏன்? இவர்களும் தங்களைத் தமிழர்கள் என்றுதானே சொல்லிக்கொள்கிறார்கள்! 'இல்லை - இல்லை; நாங்கள் தனி இனம்' என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளட்டும் -- அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

இதே போலத்தான், தமிழ்பெரும் நீதிக் கட்சித் தலைவர் சர் பி. தியாகராயர் பெயரால் அமைந்துள்ள தியாகராய நகரின் முழுப் பெயரை உச்சரிக்க இன்னமும் சிலருக்கு மனம் ஒப்புவதில்லை; 'டி. நகர்' என்றே சொல்லி வருகிறார்கள்.

யாரோ சிலருக்குப் பிடிக்கவில்லை என்பதால், பழைய பெயரே நிலைத்துவிடப் போவதில்லை; பெயர் மாற்றத்தை ஏற்க மறுப்பவர்களெல்லாம் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிடுவார்கள்; அவர்கள் வாயால் சொல்லித்தான் அண்ணாவின் பெயரை நிலைநாட்ட வேண்டும் என்பதுமில்லை.

எனவே, நம்மைப் பொறுத்தவரையில், இனி 'அண்ணா சாலை-- அண்ணா சாலை' என்றே பேச்சிலும்--எழுத்திலும் கையாள வேண்டும்; பழக்கத்தின் காரணமாகக் கை தவறியும், 'மவுண்ட் ரோடு' என்று எழுதக்கூடாது; மறந்தும் அந்தப் பெயரை உச்சரிக்கக் கூடாது; ஏருத செவிகளிலெல்லாம் ஏறும்படியாக நாம், 'அண்ணா சாலை' என்ற பெயரை உச்சரிக்க வேண்டும்.

அண்ணா சாலையில் அலுவலகம் வைத்திருப்போரும், வணிக நிலையங்களை நடத்துவோரும், தங்கள் பெயர்ப் பலகைகளில் உள்ள பழைய பெயரை அழித்துவிட்டு, 'அண்ணா சாலை' என்று எழுதச் செய்ய வேண்டும். பேரறிஞர் அண்ணா மீதும்--தமிழ் மீதும் உண்மையான அன்பும், பாசமும் கொண்ட தமிழர்களின் தலையாய கடமையாகும் இது!

கோவில் திருப்பணி --- அறநிலையத்துறை அதிகாரிகள் பொறுப்பில் நடைபெறும்

சென்னை, அக். 16—

சென்னை நகரம், தஞ்சை, மதுரை, கோவை மாவட்டங்களில் ஆலயங்களில் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள அறநிலையத் துறை உத்தரவிட்டிருக்கிறது.

இதுபற்றி அறநிலையத் துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் சொன்னதாவது:—

"திருப்பணி வேலைகளை மேற்பார்வையிடுவதற்கு அதிகாரிகள் -- ஊழியர்களை நியமிக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது; ஒவ்வொரு மாவட்டத்திலும் திருப்பணி வேலை, ஒரு துணை எஞ்சினீயர் -- இரண்டு இளநிலை எஞ்சினீயர்கள் -- இன்னபிற ஊழியர்களின் பொறுப்பில் இருக்கும்.

திருப்பணி வேலைகள் 1971 அக்டோபர் முதல் நாளிலிருந்து 1972 அக்டோபர் முதல் நாள் வரை நடைபெறும்.

மொத்தம் ரூ. 4.75 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் ஏற்கனவே திருப்பணி வேலைகள் தொடங்கி விட்டன; அந்த மாவட்டத்தில், 130 ஆலயங்களில் திருப்பணி வேலைகள் நடக்கும்; அந்த மாவட்டத்துக்காக ரூ 1.50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் ரூ. 1 கோடி—மதுரை ரூ. 1.25 கோடி—கோவை ரூ. 1 கோடி என்ற அளவில் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஜப்பானையும் மிஞ்சும் தமிழ்நாட்டுத் தயாரிப்பு

ஜி. டி. நாயுடுவின் கணக்கீட்டுப் பொறிக்கு அமெரிக்காவில் கிராக்கி

ஒரு இலட்சம் பொறிகளை வாங்க ஆர்டர் கிடைத்திருப்பதாகத் தகவல்

கோவை, அக். 15—

கூட்டல் -- கழித்தல் கணக்குப் போடும், 'கால்குலேட்டர்' இயந்திரங்களைத் தமிழ்நாட்டில் உள்ள ஒரு தனியார் ரேடியோ தொழிற்சாலை தயாரிக்கிறது.

இதுபோன்ற 1 இலட்சம் இயந்திரங்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய அந்தத் தொழிற்சாலைக்கு ஆர்டர் கிடைத்துள்ளது.

இத்தகவலை, அத்தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநர் ஜி. டி. கோபால் தெரிவித்தார்; இவர் தொழில் மேதை ஜி. டி. நாயுடுவின் மகன் ஆவார்.

"மின் சக்தியால் இயங்கும் அந்தக் 'கால்குலேட்டர்' இயந்திரங்களை ஜப்பானும் தயாரிக்கிறது; எனினும், அதைவிட 10 மி. மீ அளவு குறைந்ததாகத் தமிழ்நாட்டுத் தயாரிப்பு சிறந்து விளங்குகிறது" என்று ஜி. டி. கோபால் கூறினார்.

"உலகில் இவ்வளவு சிறிய -- இலேசான 'கால்குலேட்டர்' இயந்திரம் வேறு எங்கும் தயாரிக்கப்படவில்லை" என்று அவர் சொன்னார்.

"மாதந்தோறும் 50,000 'கால்குலேட்டர்' இயந்திரங்களை இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்க முடியும்; அடுத்த சனவரி திங்களுக்குள், அமெரிக்காவுக்கு இந்த இயந்திரங்கள் அனுப்பப்படும்" என அவர் கூறினார்.

மாநிலத் திட்டக் குழுவின் பணிகள்

மாவட்டவாரியாகத் துவங்க நடவடிக்கை

குழுவின் துணைத் தலைவர் வெளியிடும் தகவல்

சென்னை, அக். 16—

"தமிழ்நாட்டில் மாவட்டத் திட்டம் சம்பந்தமான வழிமுறைகள் விரைவில் எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் அனுப்பப்படும்; மாவட்டத் திட்டக் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே வகுக்கப்பட்டிருக்கிறது"

என்று தமிழ்நாடு திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி. இராசாராம் அவர்கள் கூறினர்.

இம்மாதம் 6-ந் தேதியன்று தமிழ்நாடு திட்டக் குழு செய்த முடிவுகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. எம். ஜி. இராசாராம் அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"மாவட்டத் திட்டக் குழுக்களுக்குத் தலைமை வகிப்பதற்கான மாவட்ட திட்ட அதிகாரிகளை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

துறை வாரியாகத் திட்டமிட்டு நிறைவேற்றவும், நீண்டகாலத் திட்டப் பணிகளை வகுக்கவும் 15 துறைகளுக்கு, 'பணிக்குழுக்'கள் அமைப்பது பற்றி 6 ந் தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது; அவற்றில் பெரும்பாலான பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை, விரைவில் அலுவல்களைத் தொடங்கும்.

இராமனுதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் தொழில் -- பொருளாதார வளர்ச்சி பற்றிய தொடக்க ஆய்வு தொடங்கியிருக்கிறது.

திட்டக் கமிஷன் உறுப்பினர் டாக்டர் சக்கரவர்த்தி இம்மாதம் 30-ந் தேதியன்று சென்னை வருகிறார்; நீண்டகாலத் திட்டப் பணிகளை வகுப்பது பற்றி அவருடன், மாநிலத் திட்டக் குழு ஆலோசனை நடத்தும்; மத்தியத் திட்டக் குழுவுடன் மாநிலத் திட்டக் குழு தொடர்புகொண்டு செயல்படும் என்பதை இது காட்டுவதாகும்.

மாநில திட்டக் குழுவின் விரிவான அறிக்கை 1973-ம் ஆண்டு மத்தியில்தான் தயாராகும்; ஆனால், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற அவசரத் தன்மை வாய்ந்த பிரச்சினைகள் குறித்து இடைக்கால அறிக்கைகள் வெளியிடப்படலாம்."

வேலை வாய்ப்பை அதிகரிக்கத் திட்டம்

மத்திய அரசு பரிசிலனை

புதுடில்லி, அக். 16—

"நாட்டில் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்தக் காலக்கெடுவுடன் கூடியதாகவும்—ஒதுகுறிப்பிட்ட இலக்கைக் கொண்டதாகவும் உள்ள ஒரு திட்டத்தைப் பாங்கிகள் மூலம் தொடங்குவது பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்துவருகிறது"

என்று நிதியமைச்சர் ஒய். பி. சவாண் அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

கடன் உத்தரவாதக் கார்ப்பரேஷன் மூன்று மாதங்களுக்கு முன் அமைக்கப்பட்டது; அது நன்கு செயல்பட்டு வருகிறது; சுமார் ரூ. 7 கோடி தொகைகளுக்கான கடன்களுக்கு அது உத்தரவாதம் தந்திருக்கிறது; இந்தத் தொகையில் சுமார் ரூ. 3 கோடி சிறு விவசாயிகளுக்குத் தரப்பட்ட கடன்கள் ஆகும்.

இந்தக் கார்ப்பரேஷன் ரூ. 5,000 வரையிலான தொகைகளுக்கு உத்தரவாதம் தருகிறது; இதை ரூ 10,000 ஆக உயர்த்தலாமா என்பது பற்றி அரசு பரிசிலனை செய்துவருகிறது.

பாங்கிகளிலிருந்து நிறைய அளவில் கடன்களைப் பெரிய வர்த்தக நிறுவனங்களே இன்னமும் பெற்று வருகின்றன என்று கூறப்படும் புகார் சரியானதல்ல; ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகளுக்கான கடன் மனுக்களை ரிசர்வ் பாங்கி முழுமையாகப் பரிசிலனை செய்கிறது; ரூ 25 இலட்சம் வரையிலான தொகைகள் பற்றிய கடன் மனுக்களை, நன்கு பரிசீலனை செய்யுமாறு இதர பாங்கிகளுக்கு ரிசர்வ் பாங்கி உத்தரவிட்டிருக்கிறது; பெரும் தொழிலதிபர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களின் எண்ணிக்கையின் விகிதம் குறைந்து வருகிறது என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன."

நிதி அமைச்சகம் தொடர்பான எம்.பி.-க்கள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சவாண் பேசியதற்கு முன் உறுப்பினர்கள் பேசினர்; அரசுடைமையாக்கப்பட்ட பாங்கிகள் செயல்படும்விதம் குறித்து உறுப்பினர்கள் பலர் குறை கூறினர்; 'முதல் ஆண்டில் பெறப்பட்ட வளர்ச்சியின் வேகத்தை அவற்றால் நிலைநிறுத்திக் கொள்ள முடியவில்லை' என்று அவர்கள் கூறினர்; 'பாங்கிகள் திறமைக் குறைவாகச் செயல்படுகின்றன' என்றும், 'கிராமப்புறங்களில் சிறு தொழில்களுக்குக் கடன் தருவதில் இலஞ்ச ஊழல் தாண்டவமாடுகின்றன எனப் புகார்கள் கூறப்படுகின்றன' என்றும் அவர்கள் கூறினர்.

பாகிஸ்தானின் திடீர் அக்கறை

சீன உதவியுடன் புதிய திட்டங்களாம்

புதுடில்லி, அக். 16—

"டாக்காவிலிருந்து சிட்டகாங் வரையில் இரயில் பாதைகள், தொலைபேசித் தொடர்புகள் அமைப்பதுபற்றிய விவரங்களை வகுப்பதற்காக அடுத்த திங்கள் சீனாவிலிருந்து நிபுணர்கள் குழு ஒன்று கிழக்கு வங்கத்துக்கு வரும்"

என்று பாகிஸ்தான் வானொலி தெரிவித்திருக்கிறது.

இந்தப் பகுதியில் இரயில்வே சிக்னல் சாதனங்களை அமைக்கவும் இந்தக் குழு உதவுமாம்.

எரிவாயுவால் இணைக்கப்படும் பல தொழிற்சாலைகளை அமைக்கவும் 5,000 குழாய்க் கிணறுகள் அமைக்கவும் சீனாவின் உதவி கோரப்பட்டுள்ளது.

சீனாவின் உதவியுடன் ஒரு துணி ஆலையும், ஒரு சிமெண்டு ஆலையும் நிறுவப்படுமாம்.

வீட்டு வசதித் திட்டம்

மாராட்டிரத்துக்கு ரூ. 3 கோடி-- தமிழகத்துக்கு ரூ. 1 கோடி

புதுடில்லி, அக். 16—

வீட்டு வசதித் திட்டங்களுக்காக மத்திய அரசு ஒதுக்கியுள்ள ரூ. 10 கோடியில் ரூ. 3 கோடி மாராட்டிர வீட்டு வசதி வாரியத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; மீதி, ஆந்திரம் -- குசராத் -- இராஜஸ்தான் -- உத்தரப் பிரதேசம் -- கோவா ஆகிய மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தொழிற் சங்கச் செய்தி:

கும்பகோணம்-- நாகை மின்சாரத் தொழிலாளர்களுக்குப் போனஸ்

கும்பகோணம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் தொழிலாளர்களுக்கான 1970--71-ம் ஆண்டுக்குரிய போனசு பேச்சுவார்த்தை சென்னையில் நடைபெற்றது; இதில் கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குநர் திரு. இராமசாமி அவர்களும் — தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் திரு. காட்டூர் கோபால் எம்.எல்.சி. அவர்களும் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் பலனாக ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, அங்கு பணியாற்றும் தொழிலாளர்களது 1970--71-ம் ஆண்டின் மொத்த வருமானத்தில் 13 சதவிகிதத் தொகையைப் போனசாகத் தர ஏற்பாடாகியுள்ளது. இதேபோல், நாகப்பட்டினம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் தொழிலாளர்களுக்கான 1970--71-ம் ஆண்டுக்கான போனசு சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தையில் பலனாக ஏற்பட்ட ஒப்பந்தத்தினால், இங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களது 1970--71-ம் ஆண்டின் மொத்தச் சம்பளத்தில் 13 சதவிகிதத் தொகையைப் போனசாகத் தரப்படுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

கோவை வி. ஆர். டி. பஸ் தொழிலாளர்கட்குபோனசு

கோயமுத்தூர் வி. ஆர். டி. பஸ் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கான போனசு பேச்சுவார்த்தையின் பலனாக தொழிலாளர்களது சம்பளத்தில் 3 மாத அடிப்படைச் சம்பளத் தொகை போனசாகத் தரப்படுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

பெரியநாய்க்கன்பாளையம் எஞ்சினீயரிங்தொழிலாளர்கட்கு:

"கோவை பெரிய நாயக்கன் பாளையம் இலட்சுமி மெசின் ஒர்க்ஸ் என்கிற எஞ்சினீயரிங் தொழிற்சாலையில், தி. மு. க தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகப் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது; இது உண்மையல்ல; அந்தத் தொழிற்சாலையில் இயங்கி வருகின்ற தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையில் இணைந்து அங்கீகரிக்கப்பட்ட சங்கமாகிய கோவை மாவட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுமில்லை -- இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தரவும் இல்லை என்பதனை தெரியபடுத்திக் கொள்கிறேன்" என்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் காட்டூர் கோபால் தெரிவித்துக் கொள்கிறார்.

சோமசீலா திட்டத்திலிருந்து சென்னை நகருக்குக் குடிநீர்

ஆந்திர அரசுடன் விரைவில் பேச்சுவார்த்தை

நீர்வழங்கு வாரியத் தலைவர் செ. கந்தப்பன் தரும் தகவல்கள்

சென்னை, அக். 19 —

"சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் அளவை அதிகரிப்பதற்காகச் சோமசீலா திட்டத்திலிருந்து தண்ணீர் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன் தமிழ்நாடு அரசாங்கம் விரைவிலேயே ஆந்திர அரசாங்கத்தை அணுகும்"

என்று தமிழ்நாடு நீர் வழங்கு--வடிகால் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் எம்.எல்.ஏ. கூறினர்.

[சோமசிலா என்பது ஆந்திராவில் உள்ள நெல்லூர் மாவட்டத்திலிருக்கும் ஒரு பாசனத் திட்டமாகும்.]

திரு. செ. கந்தப்பன் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:—

"காவிரியிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான வீராணம் திட்டம், நாள்தோறும் தலைக்கு 40 காலன் தண்ணீர் வழங்கும் அளவை நோக்கமாகக் கொண்டது; ஆனால் 1971-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து 25 காலனுக்குக் குறைந்துவிடக்கூடும்.

ஆந்திரத்திலிருந்து தண்ணீர் பெறுவது பற்றி முன்பு தெரிவிக்கப்பட்ட பிரேரணைகளை வாரியம் பரிசீலித்தது; இதுபற்றி ஆந்திர அரசுக்கு எழுதும்; தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், இதற்கு பச்சைக் கொடி காட்டிவிட்டார்; இதுபற்றி விவாதிக்க ஆந்திர அரசிடமிருந்து ஏற்கனவே ஓர் அழைப்பு வந்திருக்கிறது.

சோமசீலா திட்டத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவது தொடர்பாகத் திட்டச் செலவில் ஏதாவது ஒரு பகுதியை மாநில அரசு ஏற்க வேண்டியிருக்கும் -- குழாய்கள் அல்லது திறந்தகால்வாய் வழியாகத் தண்ணீர் கொண்டு வருவதா என்பது போன்ற பிரச்சினைகள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

அதற்கு மாறாக, காவிரியில் தண்ணீர்க் கிடைப்பதைப் பொறுத்து வீராணம் ஏரியிலிருந்து இரண்டாவது குழாய்ப் பாதையை அமைக்கும் சாத்தியக்கூறு பற்றி வாரியம் பரிசீலிக்கக்கூடும்.

தாமதங்களுக்குப் பிறகு வீராணம் திட்டம் 1972 இறுதியிலோ அல்லது 1973 துவக்கத்திலோ முடிவடையக்கூடும்.

காங்கிரீட் குழாய்களுக்காகத் திருக்கழுக்குன்றத்திலும், பண்ருட்டியிலும் காண்டிராக்டர்கள் அமைத்துவரும் தொழிற்சாலைகளில் சனவரியிலும் உற்பத்தித் துவங்கும்.

கிராமக் குடிநீர்த்திட்டம்

ரூ 45.50 கோடி செலவில் கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்காக உலக பாங்கியின் உதவியை வாரியம் கோரியிருக்கிறது; மாநிலம் முழுவதிலும் உள்ள கிராமப் பகுதிகள், பரவலாக இத்திட்டங்களில் இடம்பெறும்.

உலக பாங்கியைச் சேர்ந்த இரண்டு பேர் கொண்ட குழு ஒன்று அண்மையில் மாநில அரசாங்க அதிகாரிகள்—எஞ்சினீயர்கள்—வாரியத் தலைவர் ஆகியோருடன் இதுபற்றி விவாதம் நடத்தியது; மாநிலத்தின் தண்ணீர் வழங்கும் திட்டங்களில், இந்தக் குழு ஆர்வம் காட்டியது; இத்தகைய திட்டங்களுக்குப் பாங்கி உதவி செய்வதில்லை என்றபோதிலும், பின்தங்கிய நாடுகளுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் அண்மைக் காலத்தில் அதன் சிந்தனைப் போக்கில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

நெல்லித்துறை திட்டம்

ரூ 14 கோடி செலவாகக்கூடிய நெல்லித்துறை திட்டத்தின் நகல்கள் உலக பாங்கியின் குழுவிடம் தரப்பட்டது; சிங்காநல்லூர், கோயமுத்தூர் நகராட்சியின் ஒரு பகுதி, மற்றும் 14 உள்ளாட்சிக் கழகங்களில் உள்ள மக்களுக்கும், தொழில் பணிமனைகளுக்கும் தண்ணீர் வழங்குவதற்காகப் பவானியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டது இந்தத் திட்டம்.

எப்படியிருந்தாலும், இத்திட்டம் இந்த ஆண்டு முடிவதற்குள் மேற்கொள்ளப்படும்; கோயமுத்தூர் மாவட்டத்தில் கடும் தண்ணீர்ப் பஞ்சம் உள்ள பகுதிகளுக்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஆயுள்காப்பீட்டுக் கழகத்திடம் கடன் கோரிக்கை

கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கு உதவி அளிப்பதற்காக ஆயுள் காப்பீட்டுக் சழகத்திடம் அனுகப்பட்டுள்ளது; மாவட்ட கலெக்டர்களுடைய அறிக்கைகளின் அடிப்படையில் விவரமான திட்ட அறிக்கைகள் விரைவில் தயாராகிவிடும். இந்தத் திட்டங்களுக்கான கடன்களுக்குத் தமிழ்நாடு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும்.

திட்டத்துக்குப் புறம்பாகக் கிராமக் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக இந்திய அரசு அளிக்கவிருக்கும் ரூ 100 கோடி முதல் ரூ. 150 கோடி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு அரசு தனக்கும் பங்கு அளிக்கக் கோரும்.

இப்போது 83 குடிநீர் வழங்கும் திட்டங்களை வாரியம் மேற்கொண்டிருக்கிறது; ஆண்டு இறுதிக்குள் இது 100 ஆகிவிடும்; மேலும் ஆய்வுக்காக 70 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஊற்று நீர்த் திட்டம்

பூமிக்கடியிலுள்ள ஊற்று நீரைப் பயன்படுத்துவதற்கான ஐ. நா. சர்வதேச நிறுவனத்தின் உதவியுடன் கூடிய திட்டங்களையும் வாரியம் மேற்கொண்டு வருகிறது; அடுத்த 50 ஆண்டுகளில் குடிநீர்ப் பஞ்சம் உள்ள கிராமங்களிலும்--காலரா நோய் ஏற்படக்கூடிய கிராமங்களிலும் (சுமார் 1,270 கிராமங்கள்) பம்புகளுடன்கூடிய 8,500 சிறிய குழாய்க் கிணறுகளைத் தோண்ட வாரியம் எண்ணியிருக்கிறது.

நிதியுதவி கிடைக்கும்

இந்த ஆண்டு, வாரியத்தின் திட்டங்களுக்காக ஆயுள் இன்ஷ்யூரன்சுக் கார்ப்பரேஷன் ரூ. 6.20 கோடி கடன் தரக்கூடும்; சென்னை நகருக்குக் குடிநீர்ப் கொண்டு வருவதற்காக வீராணம் திட்டத்துக்காக என்று கோரியுள்ள ரூ. 5 கோடி போக இந்த ரூ. 6.20 கோடி கிடைக்கக் கூடும்.

எண்ணெய் வள இயந்திரங்கள்

எண்ணெய் வளம் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களைப் பயன்படுத்த அனுமதிக்கும்படி எண்ணெய் -- இயற்கை வாயுக் கமிஷனை வாரியம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

9 நகரங்களில் வடிகால் திட்டங்கள்

கோயமுத்தூர், மதுரை, திருச்சி, காஞ்சிபுரம், பெரியகுளம், தூத்துக்குடி, கும்பகோணம், சிதம்பரம், மன்னார்குடி ஆகிய 9 நகரங்களில் வடிகால் திட்டங்களை வாரியம் மேற்கொண்டிருக்கிறது."

அம்பேத்கார் பெயரில் புதிய கல்லூரி

சென்னையில் நிறுவ ஏற்பாடு

எம். ஜி. ஆர். உட்பட 10 பேர் கொண்ட குழு அமைப்பு

சென்னை, அக். 16—

அடுத்த ஆண்டில் சென்னையில் மேலும் புதிதாக ஒரு கல்லூரி துவக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

'அம்பேத்கார் கலைக் கல்லூரி' என்ற பெயரில் பெரம்பூர்ப் பகுதியில் இந்தக் கல்லூரியை துவக்குவதற்காக சென்னை கலெக்டர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பட அதிபர்கள் ஏ. எல். சீனிவாசன், சுந்தர்லால் நாகதா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. சிவசங்கரன், சென்னை மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் எஸ். பாலன் உள்ளிட்ட 10 பேர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

கலை நிகழ்ச்சிகள் நடத்தியும்-- பொதுமக்களிடம் நிதி வசூல் செய்தும் இந்தக் குழுவினர் ரூ 5 இலட்சம் நிதி திரட்டிக் கொடுப்பார்கள்.

பெரம்பூர் பகுதியில் இந்தக் கல்லூரிக்காக 28 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்படும்.

கல்லூரி அமைப்புக் குழுவின் முதல் கூட்டம் கோட்டையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் அறையில் நடைபெற்றது. கல்வித்துறை செயலாளர் வே. திரவியம் உள்பட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டில் புதிய ஆராய்ச்சி நிலையங்கள்

தொடங்கும் தொழில் அதிபர்களுக்கு அரசின் உரிய உதவி கிடைக்கும்

தொழில் அமைச்சர் செ. மாதவன் உறுதி

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக் கிராமங்களில் தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுகோள்

சென்னை, அக். 19—

"தமிழ்நாட்டிலுள்ள தொழில் அதிபர்கள், தமிழ்நாட்டில் பல ஆராய்ச்சி நிலையங்களைத் தொடங்க முன்வர வேண்டும்; அவர்கள் தொடங்கும் ஆராய்ச்சி நிலையங்களுக்குத் தமிழக அரசு போதிய உதவியளிக்கத் தயாராக இருக்கிறது.

"நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரிய பிரச்சினையாக இருக்கிறது; இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாம் பல தொழிற்சாலைகளைத் தொடங்கி -- உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும்.

"தொழில் அதிபர்கள் கிராமப்புறங்களிலும், தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க முன்வர வேண்டும்; அப்போதுதான் நாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இந்துஸ்தான் வர்த்தகசபையின் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டி வற்புறுத்தினர்; இத்தொடர்பில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"வெளிநாடுகளிலுள்ள தொழில் அதிபர்கள் பலர், நமது நாட்டில் புதிய தொழிற்சாலைத் தொடங்க முன்வருகிறார்கள்; ஆனால், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமானால் நாம் மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

மத்திய அரசிடம் உள்ள அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் -- என்ற அரசாங்கத்தின் கொள்கையைத் தொழில் அதிபர்களாகிய நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள்.

'மாநில அரசாங்கத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும்' என்று நாங்கள் சொல்லுவது, வெறும் அரசியல் காரணங்களுக்காகவோ, அல்லது வெறும் பேச்சுக்காகவோ அல்ல; நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்காகவும் -- அதன் மூலம் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும்தான் நாங்கள் அதிக அதிகாரம் கேட்கிறோம்.

தேங்கிக் கிடக்கும் மனுக்கள்மீது முடிவு

டில்லியில் நான் தொழில் அமைச்சர் சவுத்திரியை சந்தித்துப் பேசுகையில், 'தேங்கிக் கிடக்கும் லைசென்சுகளை விரைவில் தர ஏற்பாடு செய்யவேண்டும்' என்று சொன்னேன்; அதற்கு அவரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

'தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி கோரி டில்லிக்கு மாதந்தோறும் சுமார் 200 விண்ணப்பங்கள் வருகின்றன' என்று அவர் கூறினர்; 'தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 73 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன; விரைவில் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து அனுமதி தர ஏற்பாடு செய்கிறோம்' என்றும் அவர் என்னிடம் சொல்லியிருக்கிறார்."

இந்துஸ்தான் வர்த்தக சபைத் தலைவர் கே. டி. ஷா வரவேற்றுப் பேசினர்; துணைத் தலைவர் ராஜகோபால் நன்றி கூறினர்.

நெய்வேலி தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்-- முன்னேற்றச் சங்கப் பேரவை அறிவிப்பு

சென்னை, அக். 15 —

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறிவிப்பதாவது:—

"தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையுடன் இணையப் பெற்ற நெய்வேலி லிங்க் ஊட் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தொடர்பாக வந்துள்ள பல்வேறு கடிதங்களையும்' அதனையொட்டிப் பல்வேறு குழுக்கள் வந்து சந்தித்தபோது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் அறிந்த பின்பு, தலைமைக் கழகம் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைப் பொதுச் செயலாளருக்கு வழங்கியுள்ள ஆலோசனைக்கிணங்க-- பேரவை, நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பேரவையின் பரிசீலனையில் இருக்கின்றபோதே, நெய்வேலித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்திலிருந்து நிர்வாகிகள் சிலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்-- அதற்குப் பேரவை அங்கீகாரம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும், துண்டு வெளியீடுகள் வந்துள்ளதாக தகவல் வரப்பெற்றுள்ளது.

எவர்மீது நடவடிக்கை எடுத்திருப்பதனையும் பேரவை அங்கீகரிக்கவில்லை என்பதனையும் தெரியபடுத்திக்கொள்கிறேன்.

நெய்வேலித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் தொடர்பாகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் முடிவுகள் தெரிவிக்கப்படும்வரையில், வழக்கம்போல், நிர்வாகிகளில் எவ்வித மாறுதலும் இன்றி அந்தச் சங்கத்தின் சிறப்புத் தலைவர்-- சிறப்புச் செயலாளர்--தலைவர்--செயலாளர் ஆகியோர் கலந்து பேசி சங்கப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சங்கத்திற்கு ஊறு ஏற்படுகின்ற நடவடிக்கைகளிலோ, நிர்வாகிகள் --- உறுப்பினர்கள் இவர்களுக்கு இடையில் மனமாச்சரியம் வளரத்தக்க வகையிலான நடவடிக்கைகளிலோ எவரும் ஈடுபட வேண்டாமெனவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்."

கலைஞர் கருணாநிதிக்கு ஆராய்ச்சி அறிஞர் பெருமக்கள் அளித்த பாராட்டு

பொன்னாடை போர்த்தி 'தமிழவேள்' பட்டம் வழங்கினர்

செட்டிநாட்டரசர் தலைமையில் விழா : ஆளுநர் -- அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, அக். 19—

சென்னை தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவையின் சார்பில், 'டாக்டர்' பட்டம் பெற்ற முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்குப் பாராட்டு விழாவும் -- இப்பேரவையின் சார்பில் கலைஞருக்கு 'தமிழவேள்' என்ற பட்டம் அளிப்பு விழாவும் கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு செட்டிநாட்டு அரசர் இராஜா சர் முத்தையா செட்டியார் தலைமைதாங்கி -- கலைஞருக்குப் பொன்னாடை போர்த்தினர்.

பேரவை இயக்குநர் டாக்டர் மெ. சுந்தரம் வரவேற்புரையாற்றினர்.

விழாவில் அமைச்சர்கள் என். வி. நடராசன், செ. மாதவன், இராசாராம், அன்பில் தர்மலிங்கம், மு. கண்ணப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'தமிழவேள்' பட்டமளிப்பு

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனர், கலைஞருக்கு 'தமிழவேள்' என்ற சிறப்புப் பட்டத்தினை வழங்கினர்.

டாக்டர் மெ. சுந்தரம் எழுதிய 'கலைஞரின் கவிதைத் திறனாய்வு' மற்றிய ஆய்வு நூலை மால்கம் ஆதிசேஷய்யா வெளியிட்டார்: டாக்டர் மு. வரதராசனர் அதனைப் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், தேவநேயப் பாவாணருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

அறிஞர்கள் பாராட்டு

கலைஞரைப் பாராட்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், திருப்பதி திருவேங்கடவன், பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் எஸ். டி. சுப்பிரமணியம், சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், பேராசிரியர் தேவநேயப் பாவாணர், டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, டாக்டர் சு. சங்கரராசு, பெங்களூர் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் ஜி. வெங்கடாசலன், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், மெ. செ. மெய்யப்பன் ஆகியோர் பேசினர்.

மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தமிழண்ணல், கவிஞர் அப்துல் ரகுமான், நாக. முத்தையா ஆகியோர் பாமாலை பாடினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து முதல்வர் கலைஞர் உரையாற்றினர்.

டாக்டர் மெ. சுந்தரம் நன்றி கூறினர்.

கலைஞர் உரை

பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கலைஞர் பேசியதாவது;—

"இவ்விழாவில் புலவர் பெருமக்களும், டாக்டர்களும் என்னைப் பாராட்டியபோது, நான் மாணவப் பருவத்தில் படித்த விபுலானந்த அடிகளின் 'இமயஞ் சேர்ந்த காக்கை' எனும் கட்டுரைதான் நினைவுக்கு வந்தது :—

"காக்கை ஒன்று இமயத்திற்குப் பறந்து சென்று அங்குள்ள சிகரம் ஒன்றில், அமர்ந்தபோது, அங்குள்ள பனிபட்டு காக்கை வெண்ணிறமடைந்தது; அப்போது மாலை வெயிலின் மஞ்சள் நிறக் கதிர்கள் இமயத்தின் மீது விழுந்து --- காக்கையின் மீது படிந்த பனியின்மீதும் பட்டது; அந்த மஞ்சள் நிறக் கதிர்கள் பட்ட காரணத்தால், இமயம் சேர்ந்த அந்தக் காக்கையும் பொன்னிறமாகக் காட்சியளித்தது"--

என்று விபுலானந்த அடிகள் எழுதினர்.

அதுபோல், காக்கை யாகிய நான் இந்த இமயத்தைச் (டாக்டர்கள் குழாமைச்) சார்ந்து பொன் காக்கையாகக் காட்சி அளிப்பதாகவே கருதுகிறேன்.

தென்னை மரங்கள் வளர்ந்துள்ள இடத்தில் சவுக்கு மரமும் ஒன்று இடையே வளரும்; இருந்தாலும் அதைத் 'தென்னந் தோப்பு' என்றுதான் கூறுவார்கள்.

அதுபோல், தென்னந் தோப்பாகக் காட்சியளிக்கின்ற உங்களிடையே சவுக்கு மரம் போன்ற நான் இருந்தாலும், 'தென்னந்தோப்பு' என்றுதான் நாமனைவரும் அழைக்கப்படுகிறோம்.

புருக் கூட்டத்தில் கோழி இருந்தாலும், அது, 'புருக் கூட்டம்' என்றே அழைக்கப்படும்.

அதுபோல், புருக் கூட்டமாகிய உங்களிடையே கோழியைப் போல் நான் காட்சியளிக்கிறேன்.

இங்கு பேசிய பெரும் புலவர்களும்--டாக்டர்களும், நான் இன்னும் எத்தனையோ டாக்டர் பட்டங்கள் பெற வேண்டும் என்று கூறினர்.

இதைப் பெருமையாக நான் கருதவில்லை; 'இன்னும் பல டாக்டர் பட்டம் பெறுதல்தான் பாராட்டுக்குரியவன்' என்று அவர்கள் கூறினர்கள் என்றே எடுத்துக்கொள்வேன்.

இங்கே தலைமை வகிப்பவர், அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் முத்தையா செட்டியார்; எனக்கு, 'தமிழவேள்' எனும் பட்டம் தந்தவர் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனர்; டாக்டர் மெ. சுந்தரத்தின் நூலை வெளியிட்டவர் இந்தப் பல்கலைக் கழகங்களின் வேந்தர் கே. கே. ஷா அவர்கள்!

முன்பு, வேந்தர்களைத்தான் அமைச்சர்கள் பாராட்டுவார்கள்; இப்போது எல்லா 'வேந்தர்'களும் கூடி அமைச்சர்களைப் பாராட்டுகிருர்கள்

இது, 'காலத்தின் கோலம்' என்று வேந்தர்கள் எண்ணலாம்; ஆனல், காலத்தினல் கிடைத்த அதிர்ஷ்டம் என்று நாங்கள் நினைக்கலாம்."

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

அக். 20 காலை 9-45 மணி: குடியேற்றம்; 10-30 மணி: ஏர்த்தாங்கள்—குடிநீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு; 11-15 மணி: ஜிட்டபல்லி—துவக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 11-30 மணி: ஊராட்சி ஒன்றியக் கிளை குடியேற்றம்—தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி வெள்ளி விழா; பிற்பகல் 3 மணி: குடியேற்றம் அரசினர் திருமகள் கலைக் கல்லூரி பேரவைக் கூட்டம்; மாலை 4 மணி: குடியேற்றம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் பட்டா வழங்குதலும்; 5 மணி: மாக்கம் துவக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 6 மணி: பரதராமி கிராமப் பொதுமக்கள் வரவேற்பு; இரவு 8 மணி: குடியேற்றம் பொதுமக்கள் வரவேற்பு.

மாணவர் பேச்சுப் போட்டி

சென்னை மாணவர் மன்றச் சார்பில் டாக்டர் தருமாம்பாள் சுழற் கேடயப் பேச்சுப்போட்டி கல்லூரி மாணவர்கட்கு 23—10—71 மாலை 3-மணிக்கு மன்ற நிலையத்தில் (12, வேங்கட ஐயர் தெரு, சென்னை-1) நடைபெறும்; பேசும் பொருள் -- முறையே, 'மாநில சுயாட்சித் திட்டம் நாட்டுக்கு நன்மையையே தரும்'—'மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளுதல் நல்லதன்று'.

பள்ளிக் கட்டடத் திறப்பு விழா

சென்னை 71-வது வட்டம் ஆயிரம்விளக்கு மாதிரிப் பள்ளிச் சாலையில் உள்ள மாநகராட்சிப் பள்ளியின் துணைக் கட்டடத்தை, சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் திறந்து வைப்பார்; இவ்விழா, 20—10—71 மாலை 6-மணிக்கு மேயர் சா. கணேசன் தலைமையிலும் -- முரசொலி மாறன் எம். பி. முன்னிலையிலும் நடைபெறும்.

கலைஞர் விளையாட்டரங்கம் -- அஞ்சுகம் திருமண மண்டபம்

காஞ்சியில் உருவாகின்றன

சென்னை, அக். 16—

காஞ்சிபுரத்தில் கலைஞர் கருணாநிதி விளையாட்டு அரங்கம் -- அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் ஆகியவற்றை அமைக்கும் வேலை விரைவில் மேற்கொள்ளப்படும்.

செங்கற்பட்டு மாவட்ட நலக் குழுக் கூட்டம் கலெக்டர் ஆர். ஏ. சீதாராமதாஸ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டிருக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் எவ்வளவு முன்னேறியிருக்கின்றன என்று பரிசீலிக்கப்பட்டது.

காஞ்சிபுரத்தில் விளையாட்டு அரங்கம் -- திருமண மண்டபம் ஆகியவற்றைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் இறுதியாக்கப்பட்டன.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

20--10--71

ஆரணி

தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 6-மணிக்கு பிள்ளையார்கோயில் தெருவில்; தலைவர்: புதுமை வீரன்; பேசுவோர்: இரகுமான் கான், கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., தி. சு. இலட்சுமணன் எம்.ஏ., பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., மு. கேசவன், மற்றும் பலர்.

இராசபுரம்

கிராமப் பொதுமக்கள் சார்பில் மாலை 4-மணிக்கு; தலைவர்; இரா. ம. காந்தி; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, அப்துல ஜப்பார், எஸ். மல்லையன், பி.எஸ். தண்டபாணி, எஸ். நல்லசாமி, கே. இராசு, பரமத்தி சணமுகம், வி.பி. பொன்னுசாமி, எம். செல்லையா.

21--10--71

தவுட்டுப்பாளையம்

தி.மு.க.--எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 6-30 மணிக்கு கலைவாணர் திடலில; தலைவர்: பெ. கிட்டப்பா; பேசுவோர்: திருப்பத்தூர் இராமமூர்த்தி, எம். எஸ். வெங்கடாசலம், எஸ். நல்லசாமி, என். கே. காந்தி, பரமத்தி சண்முகம், வீர. கே. சின்னப்பன், ஏ. அமமையப்பன், கே. கனகராசு, எஸ். வடிவேல், பி. ஆர். குப்புசாமி, கு. இளஞ்செழியன், டி. பி. இராமமூர்த்தி, க. நாச்சிமுத்து, மற்றும் பலர்.

தூக்குத் தண்டனை : தமிழக அரசின் நிலை

சட்ட அமைச்சர் செ. மாதவன் கருத்து விளக்கம்

பல்வேறு முறைகளைப் பரிசீலனை செய்யுமாறு வற்புறுத்தல்

சென்னை, அக். 19—

"எந்தக் குற்றம் செய்தவர்களாக இருந்தாலும், அவர்களும் திருந்துவதற்கு வாய்ப்பு உள்ளவர்கள்தான்; எனவே, 'தூக்குத் தண்டனை, எப்போதாவது நிறுத்தப்பட வேண்டும்' என்பதே எங்கள் கருத்தாகும்.

'தூக்குத் தண்டனையை நிறைவேற்றக் கையெழுத்துப் போடும் போது, எங்கள் மனம் என்ன பாடுபடுகிறது என்பது எங்களுக்குத் தான் தெரியும்.

"பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட, 'தூக்குத் தண்டனை கூடாது' என்ற கருத்தைத்தான் கொண்டிருந்தார்; அவர் மறைந்த நாளிலும், இந்தக் கருத்தையே வலியுறுத்தி வருகிறோம்; எனினும், இது குறித்து இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் ஆளுநரிடம்தான் இருக்கிறது! அவரும் எங்கள் கொள்கைக்கு உறுதுணையாக இருப்பார் என்று கருதுகிறேன்!!

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

'தேசியக் குற்றத் தடுப்பு வார'த்தின் இறுதி நாள் நிகழ்ச்சி இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது; விரைவில் கலந்து கொண்டு அமைச்சர் பேசுகையில வெளியிட்ட கருத்துக்களாவன:—

"ஒருவன் ஒரு தடவை குற்றம் செய்தால் அவன் நிரந்தரமாகக் குற்றவாளியாகக் கருதப்பட வேண்டுமா என்பது குறித்துக் காவல் துறையும் -- சட்டத் துறையும் விவாதித்துக்கொண்டிருக்கின்றன.

வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்படுபவர்களை 24 மணி நேரத்துக்கு மேல் காவலில் வைக்கக்கூடாது -- என்று சட்டம் கூறுகிறது; இதனல், போலீசு புலன் விசாரணைக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க -- முழு சாட்சியங்கள் தயாராகும் வரை -- இடைக்கால ஏற்பாடுகள் செய்யச் சட்டத்தில் வகை செய்ய வேண்டும்.

நாம், இங்கிலாந்து நாட்டுச் சட்டப் பாரம்பரியத்தைப் பின்பற்றி வருகிறோம்; இதன்படி, எவ்வளவுதான சாட்சியங்களும் -- ஆதாரங்களும் இருந்தபோதிலும் -- சிறு சந்தேகம் இருந்தால் -- சந்தேகத்தின் பலனை அளித்து ஒருவரை விடுதலை செய்யலாம்; இந்த முறையை நாம மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

முதல் தகவல் அறிக்கையைத் (எப். ஐ. ஆர்.) தயாரிக்கும் போலீசுக்காரர் செய்யும் சிறு தவறினல், உயர் நீதிமன்றங்களில வழக்குகள் தோல்வியடைகின்றன; எனவே, காவல துறையினருக்குச் சட்ட அறிவு முழுமையாகத் தரப்பட வேண்டும்.

சாட்சியம் கூறுபவர்களையும் குற்றவாளிகளைப்போல கருதி -- கூண்டில் நிறுத்தி விசாரிக்கக் கூடாது என்றும், அவர்களுக்கு மரியாதை அளித்து உட்கார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றும அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது.

போலீசுக்காரர்களை அரசியலோடு சம்பந்தப்படுத்திப் பேசும் நிலைமை மாற வேண்டும்.

காவல் துறை அதிகாரிகளின்மீது வீண்பழி சுமத்திப் பேசுவதும -- எழுதுவதும், அவர்களைக் கடமையைச் செய்வதில தயக்கம் காட்டச் செய்கிறது.

எனவே, போலீசார்மீது வீண்பழி சுமத்தியும -- குறை கூறியும பேசுபவர்களை எப்படித் தடுப்பது என்பது குறித்து அரசு ஆலோசனை செய்து வருகிறது.

போலீசார் பொதுமக்களுடன் இரண்டறக் கலந்து பழக வேண்டும்; 'போலீசார், பொதுமக்களின் நண்பர்கள்' என்பதை விளக்கிக் காட்டும் வகையில், சில ஆண்டுகட்கு முன்பு, 'உங்கள் நண்பன்' என்ற திரைப் படத்தைப் போலீசார் தயாரித்தனர்; இந்தப் படம் மக்களிடம விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது; அதைப்போல, இன்னொரு படம் தயாரிக்குமபடித் தமிழகப் போலீசுத் துறையினரைக் கேட்டுக்கொள்கிறேன்."

இரத்தினவேல்பாண்டியன்

அரசு வழக்குரைஞர் இரத்தினவேல் பாண்டியன் பேசுகையில, 'தற்போது வழக்கறிஞர்கள் இப்போதுள்ள சட்டத்தைப் பற்றியே அக்கறை கொள்கிருர்கள்; எதிர்காலத்தில் உருவாகப்போகும் சட்டத்தைப் பற்றியும் அவர்கள் அக்கறை கொள்ளவேண்டும்' என வலியுறுத்தினர்.

விழாவுக்குத் தமிழக ஆளுநர் கே. கே. ஷா தலைமை தாங்கினர்.

போலீசு விழாவையொட்டி நடந்த மாணவ -- மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி -- கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பரிசுகள் வழங்கினர்.

சென்னை மாநகராட்சி சிறந்த துப்பறியும் போலீசு அதிகாரிகளுக்குப் பரிசளிப்பதற்காக வெள்ளிக் கோப்பை வழங்கியிருக்கிறது; இந்தக் கோப்பை சென்னை மாநகராட்சியில் நடந்த ரூ. 65,000 திருட்டு வழக்கில் துப்பு துலக்கிய துப்பறியும் இன்ஸ்பெக்டர் கருப்பையாவுக்குக் கொடுக்கப்பட்டது.

டாக்சியில் பயணம் செய்தவர் வைத்துப் போய்விட்ட பொருளைத் திருப்பி அவரிடம் ஒப்படைத்த டிரைவர் சையது மொகைதீனுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

துணைத் தலைமைப் போலீசு அதிகாரி (டி. ஐ. ஜி) டயல் அனைவரையும வரவேற்றர்; சென்னைக் குற்றத் துறைத் துணைக் கமிஷனர் இராதேவன நன்றி கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (34, [illegible] செங்கற் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.